# தமிழ் நிலம்

உலகத் தமிழின முன்னேற்றக் கழக வெளியீடு

சிறப்பாசிரியர்

பாவலரேறு பெருஞ்சித்திரனார்

தி. பி. 2022 சுறவம் – கும்பம் (சன – பிப்-91) ஓர் உருபா (இதழ் எண்: 144)


# பேசுவதெல்லாம் இந்திய ஒருமைப்பாடும் ஒற்றுமையும்! செய்வதெல்லாம் திருட்டுத் தனமும் பார்ப்பனீய வேற்றுமையும்!

## இந்தியாவில் அரசியலா நடைபெறுகிறது? பதவிச் சண்டைகளும், கொள்ளையடிப்புமே!

## இந்திய அரசியலிலிருந்து பிரிந்து தனித்தமிழ்நாடு பெறுவதே தமிழர்களுக்குக் குறிக்கோளாக இருத்தல் வேண்டும்!

### தனித் தமிழ்நாட்டுக் கொள்கையுடையவர்களையே தேர்தலில் வெற்றி பெறச் செய்யுங்கள்!

## பாவலரேறு தேர்தல் வேண்டுகை!

கடந்த இரண்டாண்டுகளில் இந்திய அரசில் குழறுபடிகளும் கூத்தடிப்புகளும் சண்டை சள்ளுகளுமே நடந்து வருகின்றன. நல்லவர்களாலும் ஆட்சி செய்ய முடியவில்லை. வல்லவர்களாலும் ஆட்சி அமைக்க முடியவில்லை கொள்கை உள்ளவர்களின் ஆட்சியும் கவிழ்க்கப்படுகிறது; கொள்கையற்றவர்களின் ஆட்சியும் கவிழ்க்கப்படுகிறது. பதவிச் சண்டைக்காரர்களும், பகல் கொள்ளையடிப்பவர்களுமே மேலாங்கி நிற்கின்றனர். குழம்பிய குட்டையில் மீன் பிடிக்கின்ற இராசீவ், செயலலிதா, தேவிலால், சுப்பிரமணியம்சுவாமி போன்றவர்களே இந்திய அரசியலை ஆட்டிப் படைக்கின்றார்கள்!

வி. பி. சிங் அரசைச் சந்திரசேகரர் இராசீவுடன் சேர்ந்து கவிழ்த்தார். 11 மாதங்களே ஆட்சி-

(தொடர்ச்சி 3-ஆம் பக்கம்)

Scanned with CamScanner

# உலகத் தமிழின முன்னேற்றக் கழகம்

## செய்திகள், கருத்துகள், செயற்பாடுகள்.

**(துணைப் பொதுச்செயலர் பறம்பை அறிவன் அவர்களின் கருத்துகள், மடல்கள், அறிக்கைகள் முதலியன இப் பகுதியில் தொடர்ந்து வெளிவரும். தேவையான, விடத்து முதல்வர் அறிக்கைகளும், மடல்களும் அவ்வப்பொழுது இடம் பெறலாம்.)**

### துணைப் பொதுச்செயலர் அறிக்கை:

அன்பிற் சிறந்தோரே, வணக்கம். துணைப் பொதுச்செயலரின் வரை அறிக்கை (திருத்த-மூடன்) வந்த பிறகும், அது புதிய வளமான தங்களின் சிந்தனைகளை எதிர் நோக்கியுள்ளது. இதனைத் தாங்கள் அறிவீர்கள்.

செயலமைப்புகள் ஐந்து. அவற்றில் தாங்கள் விரும்பும் அமைப்பு வழியாக, உ. த மு. க.வில் தங்களை இணைத்துக் கொள்வீர்கள் என நம்புகி-றேன். செயலமைப்புகளும்" அவற்றின் நெறியாளர் தொடர்பு முகவரிகளும் கீழ் வருமாறு:

1) தூய தமிழ் ஆய்வியக்கம்—நெறியாளர். திரு. குழந்தை ஈகவரசன், எச். சி—364, அண்ணாநகர், திருச்சி 620016.

2) சமநிலைக் குமுகாய முனைப்பியக்கம்— நெறியாளர். திரு. மா. செ. தமிழ்மணி, ஆட்டுப்பாக்கம் (அஞ்), நெமலி வழி. வ. ஆ. மாவட்டம்.

3) அரசியல் ஆவணக்களரி- நெறியாளர். திரு. க. கண்ணன், கரடிப்பட்டி, கஞ்ச நாயக்கன்பட்டி (அஞ்), துவரங்குறிச்சி (வழி), திருச்சி மாவட்டம், 621314,

4) கலைவளர்ச்சி இயக்கம்-நெறியாளர், திரு. அதியமான், 9/147, தமிழ் இல்லங்கள் வளாகம், உள் மின்நிலையத்தின் எதிரில், தாழையூற்று, சங்கர் நகர் (அஞ்) 627357 திருநெல்வேலி, கட்ட பொம்மன் மாவட்டம்.

5) பண்பாட்டுப் பரிமாற்றச் செயலகம்- நெறியாளர். திரு. ப. முருகவேள் 2/85 சுண்ணாம்பூர், பூஞ்சுத்தி (அஞ்) 625110 மேலூர் வட்டம். மதுரை மாவட்டம்.

செயலமைப்புகளின் நெறியாளர்களும், செயலமைப்பினை ஏற்றுச் செயல்படும் கிளைப் பொறுப்பாளர்களும்,

செயலமைப்புகள்- பொறுப்பாளர்கள் குறித்து" க் கூறப்பட்ட வரைவறிக்கை அமைப்புத் திட்டத்தை நோக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

இதன்படி மூவர் இணைந்த அமைப்பை'- தலைவர், செயலர், பொருளர் பொறுப்பமர்த்தம் செய்து செயலைத் தொடர்ந்திட வேண்டுகின்றேன். தமிழின நலங் கருதிச் செயல்படும் அமைப்புகள் தங்களை 'உ. த. மு. க. தமிழகம்' என்று சார்புப் படுத்தி இயங்கவும், தோழமை கொண்டு செயல் படவும் உதவுங்கள். எடுத்துக் காட்டாக, தமிழ் மன்றம், மறைமலைக் கழகம்... அறிவியல் அரங்-கம்... எனப் பெயருடையனவாயின், அவற்றோடு தமிழ்மன்றம்,உ. த. மு. க. (தமிழகம்), மறைமலைக் கழகம், உ. த. மு. க. (தமிழகம்) அறிவியல் அரங்-கம், உ. த. மு க. (தமிழகம) என வழங்குக. இல்லையேல். உ. த. மு. க அன்பர், ஆர்வலர் இணைந்து அவ்வமைப்புப் பெயரிலேயே உ.த.மு.க.வின் உயர்ந்த கொள்கைகள் ஏழினையும் பரப்ப, வளப்படுத்த முயலுக என வேண்டுகிறேன்.

வணக்கம்

பறம்புக்குடி,
6- 12- 90.

தங்கள்,
பறம்பை அறிவன்

### ஆர்வலர்களே! அன்பர்களே!

**'தமிழ்நிலம்' இன்றி உ. த. மு. கஇயக்கமாகாது. நடுவக்குழு உறுப்பினர்களும் தமிழின மக்களும் இனி என்ன செய்தல்வேண்டும்? உங்கள் பங்களிப்பென்ன?**

1) 'தமிழ்நிலம்' இதழில் வரும் படைப்புகளைத் திறனாய்ந்து எழுதுங்கள்.

2) புதிய படைப்புகளை எழுதித் 'தமிழ் நிலத்தைச் செழுமைப்படுத்துங்கள்.

3) ஒவ்வொரு தமிழரும் 'தமிழ்நிலம்' இதழை வாங்கிப்படிக்க வழி செய்யுங்கள்.

4) உ. த. மு. க. அமைப்புகளைக் கட்டுங்கள்.

5) உ. த. மு. க. ஏழு கொள்கைகள் பற்றி மக்களிடம் எடுத்துச் சொல்லுங்கள்.

6, 'தமிழ் நிலம்' வளர்ச்சிக்கான நன்கொடையை வழங்கி வாருங்கள்.

7) கலந்துரையாடல், இசை, பாவரங்கம், கருத்தரங்கம் கூட்டிச் செய்திகளை கருத்தாக்கங்களைத் 'தமிழ் நிலம்' தழுக்கு விடுத்து உதவுங்கள்

பறம்புக்குடி,
623707.

பறம்பை அறிவன்
(துணைப் பொதுச் செயலாளர்)

Scanned with CamScanner

(1 -ஆம் பக்கத் தொடர்ச்சி)
யிலிருந்த வி. பி. சிங்கை, அவர் மண்டல் குழு அறிக்கையைச் செயலுக்குக் கொண்டு வர முயற்சி செய்தார் என்பதற்காகவும், அத்வானி, வாச்பேயி முதலிய பச்சைப் பார்ப்பனப் பதடிகள் தலைமை-யேற்றிருக்கும் பாரதீய சனதா, விசுவ இந்து பரிசத், ஆர். எசு. எசு. போன்ற இயக்கங்கள் கொண்ட இராமர் கோயில் சிக்கலுக்காகவுமே வி. பி. சிங் என்னும் நேர்மை மாந்தர் அரசு கவிழ்க்கப்பட்டது.

அந்நிலையில், மக்கள் சாய்காலை இழந்த பல ஊழல்கள் புரிந்த முன்னாள் தலைமையமைச்சர் இராசீவ், கரவான முறையில் வஞ்சக மனத்துடன் சாணக்கிய சூழ்ச்சி செய்து குரங்கு தன் குட்டியின் வாலை விட்டு ஆழம் பார்ப்பதைப் போல, 54 பாராளுமன்ற உறுப்பினர்களையே ஆதரவாளராக்கிக் கொண்ட சந்திரசேகரை ஆட்சியில் ஏற்றி அவரைத் தம் கைப்பாவையாக ஆக்கித் தம் விருப்பத்திற்கு ஆட்டி வைத்து அசாம், தமிழ்நாடு, ஆந்திரா, புதுச்சேரி முதலிய மாநில அரசுகளை அடியோடு குப்புறக் கவிழ்த்துக் குடியரசுத் தலைவராகிய பார்ப்பன வெங்கட்டராமனின் ஆட்சியை அமையச் செய்தார். அரசியலும், அதிகாரமும் வாய்ப்புகளும் பார்ப்பனியத்திற்கு இருக்கவேண்டும் என்று எண்ணுவதில் குடியரசுத்தலைவர் வெங்கட்டராமன் யாருக்குமே கிழானவரல்லர் என்பதைக் கடந்த இரண்டாண்டுகளாக நடந்த இந்திய ஆட்சி நாடகங்கள் தெள்ளத் தெளிவாகக் காட்டிவிட்டன.

இவ்வாறான, சூழ்நிலையில், இரு காவலர்கள் வேவு பார்த்தனர் என்னும் நொண்டிச்சாக்கை அடிப்படையாக வைத்து, ஏறத்தாழ மூன்றரை மாதங்களே ஆட்சி செய்த சந்திரசேகரரையும் அண்மையில் கவிழ்த்து விட்டார், இந்த அரசியல் பத்தினியான இராசீவ்!

இந்த ஊழல் பேர்வழிக்குத் துணையாகவும் இவரின கொள்ளைப் பணத்திற்குப் பங்காகவும், இங்கு, முன்பு மூப்பனார் கூட்டமும், இக்கால் செயலலிதா, வாழைப்பாடி, திண்டிவனங்கள் குமரி அனந்தன்கள் போன்றவர்கள் கூட்டமும் செயல்பட்டன; படுகின்றன. பணம் என்றால் வாய் திறந்து வயிறு கழுவுகின்ற இப் பிணந்தின்னிக் கழுகுகள் அரசியலில் ஏதோ பெரிய அறிஞர்கள் போலவும், தேசியப் பற்றுள்ளவர்கள் போலவும், கதைநாயகனுக்கேற்ற கட்டியங்காரன்களாக நாடகம் ஆடுகின்றனர்.

இவர்களும் இவர்களைப் போன்றவர்களும் பேசுவதெல்லாம் இந்திய ஒருமைப்பாடும் ஒற்றுமையும்! ஆனால் செய்வது எல்லாமே திருட்டுத்தனங்களும், பார்ப்பனியச் சூழ்ச்சிகளும் வேற்றுமைகளுமே! இந்தியாவில் அரசியலா நடைபெறுகிறது? பதவிச் சண்டைகளும், கள்ளப் பணங்களைப் பகிர்ந்து கொள்ளும் பகற் கொள்ளைகளுந்தாமே! விலக்காக ஒரிரண்டு இடங்களில் ஒரிரண்டு நல்ல செயல்கள் இருக்கலாம். ஆனால் அவற்றால் என்ன பயன்?

முதலாளியமும் பார்ப்பனியமும் இணைந்து, சாதியத்தையும் மதவெறியையும் முன்னிறுத்தி, இவர்கள் செய்யும் அட்டுழியங்களுக்கும் அறக்கேடுகளுக்கும், காந்தியத்தையும், பார்ப்பனப் 'பாவலன் பாரதியாரையும் பின்னிறுத்தி நடத்தப் பெறும் இந்திய ஆட்சி ஒரு கொடுங்கோல் ஆட்சி; கொள்ளையர் ஆட்சி; கொலைகாரர் ஆட்சி; வல்லதிகார ஆட்சி என்பதில் எள்ளளவும் ஐயமில்லை!

இந்தச் சூழ்நிலையில், இனிமேலும், இந்திய நடுவண் அரசுடன் தமிழின மக்கள் அரசியல் தொடர்பு வைத்துக் கொள்ளக் கூடாது. எத்தனை வழக்காடினாலும், ஞாயம் பேசினாலும், வடநாட்டானும், ஆட்சித்தலைமையைப் பிடித்துக் கொண்டிருக்கும் பார்ப்பானும் தமிழினத்தை மதிக்க மாட்டார்கள். அவர்களுக்கு உரிமைகளை வழங்க மாட்டார்கள். இவர்களுக்காகவே இவர்களே எழுதி வைத்துக் கொண்டிருக்கும் சட்டங்களும் அதிகாரங்களும் அறமன்றங்களும் இவர்களுக்குத் துணையாகவே இருக்கும். இந்த நிலையை எந்த மாநில அரசாலும் என்றைக்கும் மாற்றவே முடியாது. இன்னும் குறிப்பாகத் தமிழ்நாட்டு அரசைக் கைப்பற்றும் எந்தக் கட்சி ஆட்சியும் கூட இவர்களைத் தட்டிக் கேட்கவோ, தங்களின் வாழ்வுரிமைகளைப் பெறுவதற்கோ முயற்சி செய்யாது; செய்ய முடியாது, இந்தியா உரிமை பெற்று நாற்பத்து நான்கு ஆண்டுகளாகியும், தமிழர்கள், திராவிடர்கள் என்று இம் மாநில ஆட்சியைக் கைப்பற்றிய எவரும் கூட அவ்வாறு செய்ததில்லை. செய்வதற்கு முயற்சி செய்வதும் கூட இல்லை.

இறுதியாக, தமிழக அரசுப் பொறுப்பைக் கடந்த இரண்டு ஆண்டுகளாக ஏற்றிருந்த கலைஞரின் தி. மு. க. அரசு கூட மாநில ஆட்சி என்ற அளவில்தான், வடநாட்டாருடனும் தமிழினத்தின் கழுத்தை அரிந்து கொண்டிருக்கும் பார்ப்பனருடனும கூடிக் குலவி, தனிப்பட்ட தங்களின் நன்மைக்கும், பதவி நலத்திற்கும், அதிகார வாய்ப்பிற்குமாக ஆட்சி நடத்தியதே தவிர, தமிழுக்கென்றோ, தமிழினத்தின் நிலையான அடிமை நீக்கத்திற்கென்றோ, தமிழ் நாட்டின் உரிமை மீட்சிக்கென்றோ எந்த ஒரு செயலையும் செய்ததில்லை. வள்ளுவர் கோட்டமும், பூம்புகார் அமைப்பும், கன்னியாகுமரியில் அமையவிருக்கும் திருவள்ளுவர் சிலையும், இலவயக் கல்வியும், சாரவுணவும், இலவய அரிசியும் வேட்டி சேலைக் கொடுப்பும் அரசியலும் அன்று; ஆட்சியியலும் அன்று; இனமீட்பும், உரிமை மீட்சியும் அல்ல! வெறும் ஏமாற்றும் கண்துடைப்புமே

(தொடர்ச்சி 12-ஆம் பக்கம்)

Scanned with CamScanner

# செருமானிய இணைப்பும் உருமாறிய உலகும்!

--த. அரிமா வளங்கோ, பிரான்சு,

1989-ஆம் ஆண்டின் மிகப் பெரும் வியப்பான செயல் இரு செருமானிகளும் (கிழக்கு-மேற்கு) ஒரே நாடாக இணைந்ததுதான்! இரண்டாம் உலகப் போரில் ஆரியத் தேசிய வெறியால் (நாசிசம்) செருமானி ஏனைய ஐரோப்பிய நாடுகளுக்குப் புரிந்த தீமைகளுக்கும் அழிவுகளுக்கும் ஏதங்களுக்கும் பகரமாக, வெற்றி கொண்ட நேசநாடுகள் செருமானியைத் துண்டாடின. கிழக்குச் செருமானி உருசியாவின் கீழும், மேற்குச் செருமானி பிரஞ்சு-ஆங்கில-அமெரிக்கப் படைக் கண்காணிப்பின் கீழும் இரு நாடாக இலங்கின. இடையில் வைத்த தடுப்புச் சுவரால் தலைநகராக இருந்த பெர்லினும் இரண்டு பட்டுப் போனது!

'பாலும் தேனும் ஓடுவதாகப் பரப்பி விட்ட விளம்பரத்தால் கீழை ஐரோப்பிய நாடுகளைத் தன் பிடியில் வைத்திருந்த உருசியா, கடந்த 20 ஆண்டுகளாக உள் நாட்டுத் தேசிய இனங்களின் குரல்வளையை நசுக்கியபடி, அண்டை நாடுகளான பல்கேரியா, போலந்து, செக்கோசுலோவோகியா, யூகோசுலாவியா, உருமானியா, அங்கேரியா, அல்பேனியா, கிழக்குச் செருமானி, எனப் பல நாடுகளில் நுழைந்து கீழை ஐரோப்பியரைத் தம் ஏவலுக்கு அடிப்படுத்தி வைத்தது. இதனால், படைவலிவு பெருகிய அளவிற்குப் பொருளியல் வலிவு பெருகவில்லை. பிடிபட்ட கீழை ஐரோப்பிய நாடுகளும் உள் நாட்டுத் தேசிய இனங்களும் தங்கள் வளத்தை உருசியாவின் தலைநகரத்தைச் சுற்றியுள்ள ஒரு சில வெள்ளை உருசிய நாடுகளுக்குக் கப்பமாகக் கட்டி வந்தன. இதனால் சிவப்பு உருசியா என்றழைக்கப்படும் ஆசியப் பகுதியில் உள்ள பெரும்பான்மை உருசிய மக்கள் நலமுறவில்லை. எதிர்ப்போரைப் பொதுவுடைமையின் பேரால் சைபீரியப் பனிப் பகுதிகளில் தொழும்பர்களாக்கிப் பணிய வைத்து வந்தது உருசியத் தலைமை!

ஆனால் ஊட்டங் குறைந்த பொருளியலால் உருசியாவின் தலைமையே ஆட்டங் கொண்டது. ஆங்காங்கே தேசிய இனங்களின் எழுச்சியும் பிடியுண்டிருந்த நாடுகளின் கிளர்ச்சியும் உருசியாவுக்கு ஒரு பெரும் அறைகூவலாக எழுந்து மருட்டின! இடையில் ஆபுகானித்தானத்தில நுழைந்ததால் உலகளாவிய கெட்ட பெயரையும் உருசியா தேடிக் கொண்டது. இதனால் மேலிடத் தலைவர் (Politburo) கூடி கோர்ப்பசேவு என்னும் மேனாள் ஒற்று நிறுவனத்(K.G B.)தலைவரை ஆட்சியில் அமர்த்தினர். ஆசியப் பகுதிகளின் ஆர்ப்பரிப்பை ஐரோப்பியப் பகுதி உருசியா தாங்கமுடியாது என்று திட்டவட்டமாகத் தெரிந்து விட்டது; அதே நேரம், பிடிபட்ட நாடுகளின் ஐரோப்பிய வாடை உருசியாவுக்குள் உள்ள இலித்துவேனியா • இலித்தானியா, மால்டோவியா, மாசுகோ...போன்ற பகுதிகளில் மற்றைய மேற்கு ஐரோப்பிய முறையில் தாங்களும் வாழ வேண்டும் என்ற ஏக்கத்தைத் தூண்டி விட்டு விட்டது!

இதனைக் கருத்தில் கொண்ட மேலிடம் விரைவு விரைவாக ஐரோப்பியப் படுத்தும் பணியில் கோர்ப்பசேவுக்கு முழு அதிகாரம் அளித்தது.

மேற்கு—கிழக்கு ஐரோப்பாக்களை இணைக்கும் முகாமைப் புள்ளியாக இரு செருமானிகளும் இணையும் இடம் அமைந்திருந்தது.

கடந்த சில ஆண்டுகளாக உரோமில் உள்ள போப்பாண்டவரின் போலந்து நாட்டில் கனி (சுரங்க)த்தொழிலாளரால் மூடுக்கிவிடப்பட்ட இதே போன்ற ஐரோப்பியப் படுத்தப் போராட்டம் போலந்தில் ஆட்சியை அசைத்து மாற்றியது. இதனை யொட்டி, மற்றைய கீழை ஐரோப்பிய நாடுகளிலும் உருசியத் தொடர்பை முறித்துக் கொள்ள வேண்டிய எண்ணமும், பொதுவுடைமைக் கொள்கையையே ஐரோப்பியருக்கு ஏற்றவண்ணம் மாற்றியமைத்துக் கொள்ள வேண்டிய கட்டாயமும் தோன்றின.

இந்தச் சூழலை உருசியத் தலைமையே ஊக்குவித்தது. இதனை மேலை ஐரோப்பியரின் வெறுப்பை விருப்பமாக மாற்றுவதற்கும் பொருளியல் வளத்தில மிக மேம்பட்டிருக்கும் அமெரிக்க-ஐரோப்பிய நாடுகளை முதலீடு செய்ய ஈர்ப்பதற்கும் உள் நாட்டுக் குழப்பத்தைச் சமாளிப்பதற்கும் பயன் படுத்தியது.

மேலை ஐரோப்பிய நாடுகளிலும் இதே நேரத்தில் தங்களுக்குள் வணிக ஒப்புரவுக்கு (Common market) இணைந்த நாடுகள் இதனை வரவேற்கலாயின! இப்படி வணிகக் கூட்டில் இணைந்த நாடுகள் காலப்போக்கில் தமக்குள் ஒரே படை, ஒரே காசு, ஒரே அறமுறைகள், ஒரே வகையான ஆவணக்களரிகள் என்று ஒருமைப்பட எண்ணியதைத் தொடர்ந்து விரைவில் வேலையின்மை வலுப்பட வாய்ப்பு ஏற்பட்டு வருகின்றது. ஏதிலிகளாகவும் வந்தேறிகளாகவும் பொருள் வலிவற்ற நாடுகளைச் சேர்ந்த மக்கள் ஐரோப்பாவின் பல நாடுகளில் கணிசமான அளவிற்குக் குவிந்து கிடக்கின்றனர். இதனால் ஆங்காங்கே நிறவெறிப் பூசல்களாய் ஐரோப்பா இன்று அரசியல் வலிவு குன்றி வருகின்றன, மேலுக்கு நிறவெறியை எல்லா வெள்ளையரும் எதிர்த்த போதிலும், உள்ளூர அதனை ஊக்குவிக்கத் தவறுவதேயில்லை. தற்போதுள்ள மேலை ஐரோப்பிய மக்கள் தொகையில் பத்தில் ஒன்றாக ஐரோப்பியரல்லாத வெளி நாட்டாரின் எண்ணிக்கை கூடிவிட்டது.

(தொடர்ச்சி 9-ஆம் பக்கம்)

Scanned with CamScanner

# களிறும் கடுவாயும் களம் பொருத கதை கேண்மினோ!

தஞ்சை நலங்கிள்ளி, அமெரிக்கா.

ஏறத்தாழ ஐம்பது ஆண்டுகளுக்கு முன்னால் வியத்நாமிய நாடு (Vietnam) பிரான்சு நாட்டுக்கு (France) அடிமைப் பட்டுக் கிடந்து, பிரான்சு நாட்டு அரசால் ஆளப்பட்டு வந்தது. (அமெரிக்கா வியத்நாமுக்குச் செல்லுமுன்னால் நடந்தது இது.) வியத்நாமிய விடுதலைப் படையொன்றை அமைத்து, பிரான்சுப் படைகளுடன் போரிட்டு வந்தார் கோ—சி—மின் (Ho-Chi-Min) எனும் வியத்நாமியர். வியத்நாமிய விடுதலைப் படையோடு ஒத்துப் பார்க்கும் போது, பிரான்சு மிகப் படை வலிமை மிகுந்த நாடு—நூற்றுக்கணக்கான போர் வானூர்திகளையும், கவசப் படை வண்டிகளையும் (tanks), தகரிகளையும் (பீரங்கிகளையும்), இன்ன பிற போர்க் கருவிகளையும் கொண்டிருந்தது. அக்கால், தாளிகைச் செய்தியாளர் (newspaper reporter) ஒருவர் கோ—சி—மின்னிடம் நடத்திய நேருரையின் (interview) போது, "பிரான்சுக்கு உங்களை விடவும் மிகுந்த படை வலிமையிருக்கிறதே; வியத்நாமிய விடுதலைப் படை அதனை எவ்வாறு தோற்கடித்து வியத்நாமிய விடுதலையைப் பெறமுடியும்?" என்று கேட்டார். கோ—சி—மின் கொடுத்த விடை பின்வருமாறு:

"நாங்கள் நடத்துவது மறைந்துறை போர் (கொரில்லாப்போர், guerrilla war). மறைந்துறை போர் ஒரு களிற்றுக்கும் (யானைக்கும்) கடுவாய்க்கும் (புலிக்கும்) நடக்கும் சண்டையைப் போன்றது. யானையைப் போல மிகுந்த வலிமை கொண்டது பிரான்சு. அதனைப் போல மிகுந்த வலிமையில்லாவிட்டாலும், புலியைப் போல விசையும் (வேகமும்) சண்டையிடும் ஆற்றலும் படைத்தது வியத்நாமிய விடுதலைப் படை. யானையும் புலியும் சண்டை போடும்போது என்ன நடக்கிறது? யானை புலியைத் தாக்கித் தனது வலிமையான கொம்பால் (தந்தத்தால்) குத்தியோ, துதிக்கையால் தூக்கியடித்தோ, காலால் மிதித்தோ கொல்லவும், உடலை ஊறு படுத்தவும் முயலும். புலியோ, யானை அதனைத் தாக்கும் போது, யானையின் முன்னிருந்து விலகி, வலப்புறமோ இடப்புறமோ சென்று, யானையைத் தனது கால் உகிர் (நகங்) களாலும் பற்களாலும் பீறும். யானை மீண்டும் புலியைத் தாக்க முன்வரும். புலியோ, மீண்டும் யானையின் முன்னிருந்து விலகி, வலப்புறமோ இடப்புறமோ சென்று, யானையை மீண்டும் உகிர்களாலும், பற்களாலும் பீறும். இவ்வாறு சண்டை சற்றே காலம் நீடிக்கும். புலியால் பீறுண்ட இடங்களிலிருந்து யானையின் குருதி வழிய, யானை தளர்ந்து தள்ளாடி விழுந்து சாகும். அல்லது புலியை விட்டு விட்டு ஓடிவிடும். இதே போல பிரான்சு நாட்டுப் படையோடு வியத்நாமிய விடுதலைப் படை போராடும். நாளடைவில், எங்கள் தாக்குதல்களுக்குத் தாளமாட்டாமல், பிரான்சுப் படை தளர்ந்துபோய் வியத்நாமிய நாட்டைவிட்டு வெளியேறும். வியத்நாம் விடுதலை பெறும்." கோ—சி—மின் கூறியது போலவே பிரான்சு சில ஆண்டுகளுக்குப் பின் வியத்நாமை விட்டு வெளியேறியது. வியத்நாம் விடுதலை பெற்றது.

தமிழீழ விடுதலைக்காகச் சிங்களப் படையோடு போராடுகின்ற தமிழீழ விடுதலைப் புலிகளின் போர் முறைகளைப் பார்க்கும் போது, யானையும் புலியும் சண்டைபோடுகின்ற காட்சி தான் நினைவுக்கு வருகிறது. எடுத்துக் காட்டாக, 1990 சூன்-சூலைத் திங்களில, தமிழீழத்தின் கிழக்குப் பகுதியில் சிங்களப் படைக்கும் விடுதலைப் புலிகட்கும், நடந்த போர்களை மறைந்துறை போர் (கொரில்லாப் போர்) முறைகட்கேற்ப ஆய்ந்து பார்ப்போம். 1990-சூன் திங்களில் போர் தொடங்கியதும், சிங்களப் படை திரிகோணமலை, பத்திக்கோலா ஆகிய நகர்களைத் தாக்கியது. இது, யானை தனது கொம்பைச் (தந்தத்தைச்) சரித்துக் கொண்டு புலியைத் தாக்கப் போவதைப் போன்றது. விடுதலைப் புலிகள் என்ன செய்தார்கள்? எவ்வளவு சிங்களப் படையாளர்களைக் கொல்ல முடியுமோ அவ்வளவு பேரைக் கொன்று விட்டு, எத்துணையளவு சிங்களப் படைக்குச் சேதம் விளைக்க முடியுமோ அத்துணைச் சேதமும் விளைவித்து விட்டுப், பின்னர் நகர்களை விட்டு வெளியேறி நகர்களையொட்டிய வெளிப்புறத்தே சென்று. அங்கிருந்து தக்க சமயங்களில் சிங்களப் படையை அவ்வப் போது தாக்கிச் சிங்களப் படைகளுக்கு மேலும் மேலும் சேதம் விளைவித்தார்கள். யானை தாக்கும் போது, புலி வலப்புறமோ இடப்புறமோ சென்று யானையின் மீது பாய்ந்து தனது கால் உகிர்களாலும் பற்களாலும் யானையைப் பீறி அதன் குருதியை வழிய வைப்பது போன்றது, இப் போர் முறை.

இவ்வாறு தமிழீழ விடுதலைப் புலிகள் மறைந்துறை போர் (கொரில்லாப போர்) மரபுக்கேற்பப் போரிட்டதை அறிந்து கொள்ளலாமோ—அல்லது அறிந்தும் அறியாதது போல வெளிக் காட்டிக் கொண்டோ—சிங்களப் படைத் தலைவர்கள் "விடுதலைப் புலிகள் வலிவிழந்து விட்டார்கள். அவர்களைச் சில நாட்களில் தோற்கடித்து விடுவோம்" எனத் துள்ளிக் குதித்தார்கள். இப்படிச் சிங்களப் படைத் தலைவர்கள் தாளிகைச் செய்தியாளர்களிடம் (newspaper reporters) சொல்லிக் கொண்டிருக்கும் அதே வேளையில், தமிழீழ விடுதலைப் புலிகள் திரிகோணமலை நகரின் வெளிப்புறத்தே—நகரிலிருந்து ஓரிரு கல் தொலைவிலேயே—தங்களின் படைக்கருவிகளுடன் எந்தவொரு தங்குதடையு-

மின்றிச் சுற்றி வருவதை வெளிநாட்டுச் செய்தியாளர்கள் நேரிலேயே கண்டு அதனை உலகுக்கு வெளிப்படுத்தினர்கள்.

யானை-புலிச் சண்டை யென்பது மறைந்துறை போரின் (கொரில்லாப் போரின்) ஒரு முறை. இது போல மறைந்துறை போர் முறைகள் பல உள்ளன. இம் முறைகளின் நுணுக்கங்களை யெல்லாம் நன்கு உணர்ந்தவர்கள், இடத்துக்கும், காலத்துக்கும், போர் நிலைகட்கும் தக்கவாறு, இடத்துக்கு இடம், காலத்துக்குக் காலம், போர் முனைக்குப் போர்முனை தக்கதொரு மறைந்துறை போர் முறையைப் பயன் படுத்துவார்கள். சில வேளைகளில் விடுதலைப் படையினர் தங்களின் பாசறைகளைப் பாதுகாத்துக் கொள்ளப் பகைப்படையுடன் நேருக்கு நேர் போரிட வேண்டும். சில வேளைகளில் தங்களின் பாசறைகளை விட்டு வெளியேறிப் பகைப்படையைப் பக்கத்தேயிருந்து தாக்கிட வேண்டும். சில வேளைகளில் முன்னும் பின்னுமிருந்து தாக்கிட வேண்டும். இப்படியாகப் போர் முறைகள் பல. தமிழீழ விடுதலைப் புலிகள் இடத்துக்கும், காலத்துக்கும், போர் நிலைகளுக்கும் தக்கவாறு பல்வேறு இடங்களில் பல்வேறு வகைகளில் போரிடுவது, விடுதலைப் புலிகளின் போர் நுணுக்க அறிவு பரந்தும், ஆழ்ந்தும் பட்டது என்பதைக் காட்டுகிறது. (கடந்த சில காலமாக மறைந்துறை போர் (கொரில்லாப் போர்) முறைகள் பற்றிய நூல்கள் சில வற்றை நான் படித்து வந்தாலும், அது பற்றிய என் அறிவு மிகச் சிறிது. ஆனாலும் ஈழத்திலே நடக்கும் போர் முறைகளைப் பார்க்கும் போது, தமிழீழ விடுதலைப் புலிகளின் போர் நுணுக்க அறிவினை என்றால் கூட ஓரளவுக்கு அறிந்து கொள்ள முடிகிறது. பல போர்களைப் பார்த்து, அவற்றை முறையாக ஆய்ந்து பார்த்தவர்கள் கூட நமது விடுதலைப் புலிகளின் போர் நுணுக்க அறிவினைப் பாராட்டுகிறார்கள். இங்கிலாந்து நாட்டிலிருந்து வெளிவரும் டைம்சு (Times) என்ற நாளிதழ் தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் **தமிழ்த்திரு.வே.பிரபாகரனைப்** பற்றி என்ன சொல்லுகிறது தெரியுமா? "பிரபாகரன் போர் நுணுக்கங்களைப் பற்றி வெகு அதிகமான அறிவு படைத்தவர் (Military genius)" என எழுதியது அந்தத் தாளிகை.

நம் தமிழீழ விடுதலைப் புலிகளின் போர் நுணுக்க அறிவையும், அந் நுணுக்கங்களைத் தமிழீழ விடுதலைப்போர் நிலைகட் கேற்ப அமைத்துப் (adapt to the conditions of the Tamil Elam liberation war) போராடும் திறனையும் பார்க்கும் போது, எம் மார்பகம் விம்மிப் புடைக்கிறது. பண்டைக் காலத்தே காலாட்படை,குதிரைப் படை, யானைப் படை, கடற்படை என்ற படைகளின் நுணுக்கங்களை யெல்லாம் தெள்ளத் தெரிந்து, அந் நுணுக்கங்களுக் கொப்ப போரிட்டுத் தமிழ்க் கொடிகளாம் விற்கொடியையோ — புலிக்கொடியையோ — மீன் கொடியையோ பகைநாடுகளிலெல்லாம் பறக்க விட்ட ஈராயிரம் ஆண்டுகட்கு முன்னைய கழக (சங்க) காலச் சேர, சோழ, பாண்டியப் படைகளைப் போல — ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னால், புலிக்கொடியை கங்கைக்கரையிலும் இந்தியத் துணைக் கண்டத்து மட்டுமல்லாமல், இலங்கையிலும், கடாரத்திலும் கூடப் பறக்க விட்ட பிற்காலச் சோழப் பேரரசர் தம் படைகளைப் போல — இந்த இருபதாம் நூற்றாண்டிலே தமிழீழ விடுதலைப் புலிப்படை வேற்று நாட்டாரும் போற்றும் வண்ணம், **போர் நுணுக்க அறிவும், போரிடும் திறனும், அஞ்சா நெஞ்சும், மறமாண்பும் — அவையனைத்துக்கும் மேலாகத் தன்னலமற்ற ஈக உணர்வும் கொண்டு** விளங்குவது காண மெய்த்தமிழர் நெஞ்சமெல்லாம் விம்மிப் புடைக்கத்தான் செய்யும்! மெய்சிலர்க்கத் தான் செய்யும்!

இத்தகைய வரலாற்றுச் சிறப்பு மிக்க படை, தமிழீழத்தின் இந்த இருண்ட காலத்திலே வந்து வாய்த்தது தமிழீழ மக்களின் நல்லூழேயாம். அத்தகைய படைக்குத் துணைநிற்க வேண்டியது உலகம் யாண்டும் வாழும் தமிழர் தம் கடனாகும். ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னால் நடந்த போர்களிலே வாளும், வேலும், வில்லும் பயனபடுத்தப் பட்டன. நூற்றாண்டுகளுக்கு முன்னால் நடந்த போர்களிலே துமுக்கிகள் (துப்பாக்கிகள்) பயன்படுத்தப் பட்டன. இன்றோ, போர் நடத்த வேண்டுமெனாறல் துமுக்கிகள் (துபபாக்கிகள்) மட்டுமல்லாமல் வேறு புதினமான போர்க் கருவிகளும் தேவைப்படுகின்றன.சிங்கள அரசின படைத்தலைவர்களும்,அமைச்சர்களும் உலகெலாம் சுற்றித்திரிந்து புதினப்போர்க் கருவிகளை வாங்கும் முயற்சிகளில் ஈடுபட்டுள்ளனர். நம் தமிழீழ விடுதலைப் புலிகள் அதற்குச் சற்றும் சளைத்தவர்களல்லர். பலவகையான தானியங்கித் துமுக்கிகளையும் (automatic rifles), தரை வெடிப்புகளையும் (land mines), தகரிகளையும் (பீரங்கிகளையும்), பெருவெடிகளையும் (mortars), விசைப்படகுகளையும், கடல் வெடிப்புகளையும் (sea mines), இன்னபிற புதினப் போர்க்கருவிகளையும் மேனாடுகளிலிருந்து கமுக்கமாக வாங்கி, சிங்களப் படைகளின் கண்களுக்குப் படாமல் கடல்வழியே ஈழத்துக்குக் கொண்டு வந்து, மிகத்திறமையுடன் அவற்றைப பயன்படுத்திப் போரிடுவது உலகம் அறிந்ததே. இத்தகைய போர்க் கருவிகளை வாங்கப் பெருமளவில் பணம் தேவை. அந்தப் பணத்தை இந்திக்காரனோ, வங்காளியோ, அசாமியனோ, காசுமீரியனோ, தெலுங்கனோ, வேறு யாருமோ தரப் போவதில்லை. **தன் கையே தனக்குதவி. தமிழனே தமிழனுக்குத்துணை.**

(தொடர்ச்சி 8-ஆம் பக்கம்)

Scanned with CamScanner

# பறம்பை அறிவன் பக்கம்!

## 1. தமிழகத்தில் ஊடுருவல்:

தமிழகத்தில் 'ஊடுருவல்' இன்றன்று நேற்றன்று பல தலைமுறைகளாக நடந்து வருகிறது. மொழி, கலை, பண்பாடு, அரசியல், பொருளியல், குமுகவியல் எனப் பலவற்றிலும் ஏற்பட்டுள்ள 'வேற்றுமை'கள், புதிய 'விளைவுகள்' ஊடுருவலின் காரணமாக ஏற்பட்டவை எனலாம். தமிழர் பல தலைமுறையாக அவற்றை எதிர்த்தும், இணங்கியும், ஏற்றும் வந்திருக்கிறார்கள். 'ஊடுருவல்' என்ற உணர்ச்சியின்றிப் பல தாக்கங்களைத் தமிழர் ஏற்றிருக்கின்றனர். ஆயினும், அவற்றை அறிவாளிகள் கலைஞர்கள்— படைப்பாளிகள் பின்னாளில் 'உணர்ந்து' கொண்டுள்ளார்கள் என்றே தோன்றுகிறது.

இப்போதும் அப்படிப்பட்ட 'ஊடுருவல்'கள் நிகழ்ந்து கொண்டுதாம் உள்ளன. அவற்றை அரசியல் காரணமானவை, குமுகவியல் காரணமானவை எனலாம்.

'ஊடுருவல்'தானா என்பதையும் அறிய முடியாதபடி பல்வேறு மயக்கங்களுக்கு நம் தமிழர் ஆளாக்கப்பட்டிருக்கிறார்கள். அந்த மயக்கத்திலிருந்து 'தன்னுணர்ச்சி' பெற்றெழுதும் உண்மைகளைக் காண்போம்!

'தமிழர்க்கோர் இன்னல்' எனில் தமிழர் கொதித்தெழுதல் இயல்பு! அத் தமிழர் தமிழினத்திற்கு ஏற்பட்டுவரும் 'இன்னல்' பற்றி எண்ணிப் பாராதிருக்கின்றனர் எனில், அது தமிழரின் 'அடிமை' நிலையையே காட்டும்!

தேவிலால் இலங்கையில் நடக்கும் 'தமிழின அழிப்புச் செயலை' அந்த நாட்டின் நடவடிக்கையாகக் காண்கிறார்! அவர் 'தமிழர் அல்லர்.' ஆயினும், அவர் 'இந்தியத் துணைத் தலைமை அமைச்சர்' பொறுப்பிலிருந்து கொண்டு இந்தக் கருத்தைத் தமிழ்நாட்டிலேயே பேச முடிகிறது! தமிழர் தம்மினம் அழிப்புக்களாவதைப் பற்றிப் பேசவும உரிமையற்றவர் ஆக்கப்படுகின்றனர்!

திருச்சிராப்பள்ளியில் தமிழ்நாடு உழவர் உழைப்பாளர் கட்சி தனது மாநாட்டிற்கு உத்தரப்பிரதேச வேளாண் கழகத் தலைவர் மகேந்திர கிங் திகைத்தை அழைத்துப் பேச இடம் தந்துள்ளது.

அவர், இங்கே வந்து 'தமிழகத்தில் பெண்களுக்குக் குடும்பச் சொத்தில் சமபங்கு அளிக்க வகை செய்யும் சட்டம் இருப்பதை, எதிர்த்துள்ளார். 'இந்தியக் குடியரசுத் தலைவர்' ஒப்புதலுடன் தமிழக அரசு கொண்டு வந்த இச் சட்டத்தை வேறு எங்கிருந்து 'திறனாய்வு' செய்தாலும் நாம் எதிர்க்கப் போவது வேறு வகையாக இருக்கும்! இந்த நாட்டுரிமையை மறுத்துப் பேச, இந்தத் தமிழர்களே 'கூட்டம் கூட்டி'க் கொடுக்கிறோம் என்பதுதான் கவலை தருவதாக உள்ளது!

இவர் இத்தோடு விட்டாரல்லர்! 'தமிழக' 'உழவர்கள்' இந்திமொழியைக் கற்க வேண்டும்' என்ற அறிவுரையும் வழங்கியுள்ளார்! இத் துணிச்சல் நம்மவரால் கொடுக்கப்பட்டதெனில் மிகையாகாது!

தமிழகத்தில் 'நாராயணசாமி' நடத்திய உழவர் போராட்டத்தைக் காட்டிக் கொடுத்தவர்களும், அப் போராட்டத்தை எதிர்த்தவர்களும் இன்று அவர்க்குப் புகழ்மாலை சூட்டலாம்!

தமிழக உழவர் எழுச்சியை, அவர் 'இந்தியா'-விற்கு எடுத்துப் போய்விட முனைந்த போது, முனை மழுங்கிப் போனார்-அல்லது—மிரட்டி அடக்கப் பட்டார் என்றே கருத இடமுண்டு!

தமிழக உழவர், வேளாண்மை குறித்த உண்மைகளையும், இவர்கள் உரிமை வாழ்வையும் அடிப்படையாகக் கொண்டு சிந்தித்தாலே, 'இந்திய உழவர்'களுடன் இணக்கம் வர முடியும். 'இந்திய உழவர்' என்பது, கானலிலிருந்து நீர் பாய்ச்ச நினைப்பதாகவே முடியும்!

இன்று, சிந்தனை தம் மக்களைச் சார்ந்து வளர்ந்து உயர்தல் மூலமே உண்மையான மாற்றங்களைக் காண முடியும்! 'உலகத்துச் சிந்தனை உள்ளூர் செயல்' என்பது ஒத்துவராத ஒன்று. 'சிந்தனையும் செயலும்' இணைந்த நடவடிக்கையை நாம் வலியுறுத்துவதன் மூலம், தேவையற்ற 'ஊடுருவல்'களைத் தடுத்தல் முடியும்!

சிந்தனையின் தொடர்ச்சி, விரிந்து பரந்த பார்வை, செயலுக்குப் படிப்படியாக வளர்ந்து செல்லும்!

O

## 2. தமிழகத் தொழில் வளர்ச்சி பற்றி:

தினமணி, கூடங்குளம் அணுவுலையை எதிர்த்து வருகிறது. அதே வேளை, 'இந்திய ஒருமைப்பாடு பற்றிப் பேசுவதில் 'தினமணி,' மக்களைக் கூட மறந்து விடும் அளவுக்குத் தீவிரம் கொண்டுள்ளது. இந்தவகையான 'தீவிரக் கொள்கை தினமணிக்குப் பிடித்தமான ஒன்று. மற்றபடியான 'தீவிரம்'...எல்லாம் 'தினமணி'க்கு ஐயுறவானதுதான்!

தினமணி (7-7-90) இதழில் 'உமாகாந்தன்' எழுதிய எதிர்பார்ப்புகள் குறித்துச் சிந்திக்க வேண்டியவர்களாக உள்ளோம்!

''தமிழகம் தொழில் துறையில் மூன்றாம் இடத்திலிருந்து 13-ஆம் இடத்திற்குத் தள்ளப்பட்டு விட்டது'' என்பதைக் 'கசப்பானவுணர்வோடு' ஒப்புக் கொண்டெழுதுகிறார் உமா காந்தன் எனத் தோன்றுகின்றது.

'தமிழகம தனித் தீவன்று; இந்தியாவின் ஒருங்கிணைந்த பகுதி. தமிழகத்தை மட்டும் தனியே

Scanned with CamScanner

முன்னேற்றிவிட முடியாது. இந்தியா முழுவதும் ஏற்பட்டுள்ள தொழில் நெருக்கடியிலிருந்து தமிழகம் தனியே தப்பித்துவிட முடியாது" என்கிறார் உமாகாந்தன்.

அப்படியானால், ஒருங்கிணைந்த பகுதியில், 'மூன்றாமிடம்' ஏன்? அது பிறகு '13-ஆம் இடம்' ஆனதேன்? தமிழகம் இவ்வாறு 'தள்ளப்பட்டது' என்பதால், 'இந்தியா சமச்சீர் கொள்கை'யில் உள்ளதென்று கூறமுடியுமா? 'தமிழகம் தனியே முன்னேறிவிடாது' என்றால், அதற்கு 'உமாகாந்தன்' கூறும் வளர்ச்சிக்கான கருத்துகள் வீண் வேலையாகி-விடும் அன்றோ?

## 3. தமிழன் என்று சொல்லத் தயக்கமேன் தோழர்களே!

திராவிடர் கழகம், ஒரு வரலாற்றுத் தேவையாய்த் தோன்றிற்று. வடவாரியத் தலைமைக் கெதிராகத் தென்னகம் திரண்டதைக் குறிப்பது. அத் திராவிடர் கழகம், ஆரியப் பார்ப்பன, வருணாசிரமக் கொள்கையை எதிர்த்துப போராடி வருவதில் நமக்கொரு எதிர்ப்பும் இல்லை. ஆனால். அக் கழகத் தலைமையை எதிர்த்துத் தோன்றிவரும் அமைப்புகள்'திராவிடர் கழகமாகவே' பெயர் சூட்டிக் கொள்ளுதல் வேண்டுமா! மயிலாடுதுறை இராமதாசரும், ஆனைமுத்தும் அப்படி அமைப்புகளைக் கட்டவில்லை. ஆனால், தங்கராசரும், கு. இராமகிருட்டிணனும் 'திராவிடர்' கழகம் என்றே இயங்குகின்றனர்.

தலைமை நாட்டமும், கட்டிய வீட்டுக்குள் குடியேறும் பாதுகாப்புணர்ச்சியும் இவர்களைப் 'பார்த்தெழுத'த் தூண்டியுள்ளன. இந்த 'அறியாமை?—குருட்டுச் சிந்தனை பெரியாரியலுக்கு எதிரான தென்றே கருதுகின்றேன். ஆனால், வரலாற்றின் திசைவழியை மீற முடியாமல், அதன் போக்கிலேயே இவர்கள் போய்க் கொண்டுள்ளனர்! தேதிய இன விடுதலை, தமிழினம் குறித்த செயற்பாடுகளிலேயே உள்ளார்கள் என்றாலும், 'திராவிட'என்ற மாயைக்குள் சிக்கித், தமிழினத்தின் அடையாளத்தை அழிப்பதில் இவர்கள் 'தங்களை அறியாமலே' ஈடுபட்டு வருகின்றார்கள்! காற்றடிக்கும் திசை மாறியதும் மீகாமன் இல்லாத படகென இவர்கள் தத்தளிப்பதுறுதியாகும்!

தமிழன், தமிழினம் குறித்த அக்கறையோடு இவர்கள் அமைப்பைக் கட்டுவதே நேர்மையான செயல்—'திராவிடன்' என்ற கருத்தரங்கம், தமிழனுக்குத் தலைமை கொடுக்காது. அவன் வீழ்ச்சிக்குத் 'திராவிடன்' எனும் கருத்தியல் காரணமாகி விடும்.

தமிழன் என்று கூறித் தங்களைக் கட்டமைத்துக் கொள்ளாமல் 'தயங்கி' நிற்பவர்களை வரலாறு குப்புறத் தள்ளிவிட்டு 'வெற்றி' மேடை ஏறப்போவதுறுதி. தமிழன் இனம் விடுதலைபெறும்.

## 4. அடிமை உணர்வும் ஆளும் ஆசையும்!

கலைஞர் தமிழகத்தில் போராளிகள் பற்றிக் கூறிவரும் கருத்துகளைப் பார்க்கும் போது, நடுவணரசின் வழியிலேயே 'தமிழக அரசு' பிசகாமல் போகிறது என்று தெரிகிறது. போராளிகள் குறித்த அச்சவுணர்வு தமிழர்களுக்கு வேண்டாத ஒன்று. தமிழீழத்தின் விடிவுக்காகத் தமிழீழத்தில் நடக்கும் போராட்டம் 'தமிழகத்தில்' தோன்றும் என்றஞ்சுவது வல்லரசிய ஆதரவுப் போக்காலேயே எனலாம்!

'விட்டு விடுதலையாகி விடு சிட்டுக்குருவியைப் போல,' என்று இவர்களிடம் ஓதிப்பயனில்லை. அடிமை உணர்வும், பெருநிலமாளும் ஆசையும் கொண்டுள்ளவர்களின் 'புலம்பலே' என்று தோன்றுகிறது. O

6-ஆம் பக்கத் தொடர்ச்சி)

மேனாடுகளிலிருந்து, புதினப் போர்க்கருவிகளை வாங்குவது மட்டுமல்லாமல், தமிழீழ விடுதலைப் புலிகள் சிலவகையான துமுக்கிகளையும்(துப்பாக்கிகளையும்), தரைவெடிப்புகளையும் (land mines) ஈழத்திலேயே செய்கிறார்கள். தமிழகத்தில் வாழும் தமிழின உணர்வு மிக்க தமிழர்கள் சிலரும், தமிழகத்தில் படைக்கருவிகளைச் செய்து விடுதலைப் புலிகளுக்குக் கொடுப்பதாகவும், மற்றும் உணவு, உடை, டீசல்நெய் (diesel), இன்னபிற பொருட்களையும், பணங்களையும் கொடுப்பதாகவும் அவ்வப்போது செய்தித்தாளிகைகளில் (newspapers) வரும் செய்திகள் நமக்கு மிக்க மகிழ்ச்சியைத் தருகின்றன. அந்த நற்றமிழ் நெஞ்சங்கள் நீடு வாழ்க! இத்தகைய உதவிகள் ஒன்றுக்குப் பத்தாக, பத்துக்கு நூறாகத் தமிழகம் முழுவதும் பரந்து பட வேண்டும்.

நமது உடன் பிறப்புகளான தமிழீழ மக்கள் ஏறத்தாழ நாற்பது ஆண்டுக்காலமாக சிங்களவரின் கையில் பட்டு, பட்டுவரும் இன்னல்கள் தீர தமிழீழ விடுதலை ஒன்றே வழி. அந்தத் தமிழீழ விடுதலைக்கு தமிழீழ விடுதலைப் புலிப்படை ஒன்றே வழி. அந்தத் தமிழக விடுதலைப் புலிகளுக்குத் துணை நிற்க வேண்டியது தமிழர் ஒவ்வொருவரின் கடமையாகும்.

வாழ்க தமிழீழம்!
வெல்க விடுதலைப் புலிகள்!

### அன்பர்கள் கவனிக்க!

பொறுப்பாசிரியர் அவர்களை வந்து காணவும் கண்டு பேசவும் விரும்பும் அன்பர்கள் கட்டாயம் வெள்ளி, காரி ஆகிய நாள்களில் மாலை 5 மணிக்கு மேல், எழுதி இசைவு பெற்றுக் கேட்டுக்கொண்டு வருமாறு வேண்டிக் கேட்டுக் கொள்கிறோம்.

Scanned with CamScanner

## தொழிலாளர்களும், பாதுகாப்புச் சட்டங்களும்!

இந்தியாவில் உள்ள மொத்தத் தொழிலாளர்களின் தொகை 2.5 கோடி. இவர்களில் அரசு, மற்றும் பொதுத் துறைகளில் வேலை செய்வோர் ஏறத்தாழ 1.9 கோடிப் பேர். தனியார் துறைகளில் உள்ள தொழிலாளர்கள் ஏறத்தாழ 60 இலக்கம் பேர்கள் தாம். இந்தியாவில் உள்ள குழந்தைத் தொழிலாளர்கள் மட்டும் 4.5 கோடிப் பேர்.

இந்தியாவில் இன்றைய நிலையில் 10 கோடிப் பேர் வேலையில்லாமல் இருக்கிறார்கள் இது நாட்டில் உள்ள மக்கள் தொகையில் எட்டில் ஒரு பங்கு ஆகும்.

இந்த நாட்டு முதலாளியப் பொருளியல் அமைப்பானது, பல வகையான ஏழைகளுக்கு மகிழ்வளிக்கும் சொல்லமைப்புகளின் மீது நடைபெற்று வருகிறது.

எடுத்துக் காட்டாக, இந்த நாட்டுத் தொழிலாளர் பாதுகாப்புச் சட்டங்கள் யாவும், இந்த நாட்டுத் தொழிலாளர்களுக்குப பயன்படுவதை விடத் தொழில் முதலாளிகளுக்குத் தாம் பயன்படுகின்றன. வறுமைக் கோட்டுக்குக் கீழ் அந்தச் சட்டங்கள் பயன்படுவதே இல்லை. அனைத்துச் சட்டங்களும் இயக்கங்களும வறுமைக் கோட்டுக்கு மேல்தான் செயல்படும்.

அன்றாடம் உழைத்து, உருவாக்கம் செய்து, கூலி பெற்று வாழும் ஆயிரமாயிரம் பேர்களுக்கு அச்சட்டம் பயனளிக்காது; அவர்களைப் பொறிகுள் சிக்கிய விலங்குகள் போன்று தொல்லை கொடுப்பவர்களுக்குத்தாம அனைத்துப் பாதுகாப்பும் இருக்கிறது.

— நன்றி, *சர்வோதயம்*-ஆக. 90

---

வெளிவந்துவிட்டது!

பாவலரேறு பெருஞ்சித்திரனாரின்

***அரிய கருத்துரைகள் அடங்கிய கருவி நூல்!***
***தமிழீழப் போராட்டத்தின் முழுவடிவமும்,***
***போராளிகளின் முயற்சிகளும், சிங்கள,***
***இந்திய அரசியல் சூழ்ச்சிகளும்***
***உள்ளடங்கிய அரிய நூல்!***

## தமிழீழம்!

(போராளிகளும், போராட்ட முயற்சிகளும்)

1970 முதல் இதுவரை ஆசிரியர் தென்மொழி, தமிழ்நிலம் ஆகியவற்றில் அவ்வப் பொழுது எழுதிய அரிய கட்டுரை, பாடல்களின் தொகுப்பு! ஏறத்தாழ 550 பக்கங்கள் கொண்டது!

55 உருபா மதிப்புள்ள நூல்! முழுத்தொகையுடன் அஞ்சல் செலவு 5 உருபாவும் அனுப்பி வைப்பவர்களுக்கு நூல் உடனே (Recorded Dely) பதிவுக்கொடுப்பஞ்சலில் அனுப்பி வைக்கப் பெறும். முன்பே 35 உருபா விடுத்தவர்கள், மேலும் உரு 25 விடுக்கவும்.

(4-ஆம் பக்கத் தொடர்ச்சி)

தற்போது கீழை ஐரோப்பிய நாடுகள் உருசியப் பிடியிலிருந்து விலகியதால் அந் நாடுகளும் தங்கள் வேலையின்மைச் சுமையை மேலை ஐரோப்பாவுக்குள் இறக்கி வைக்க முற்படுகின்றன. இதன் காரணியமாகப் பழைய எதிலிகளுக்கும் புதிய (ஐரோப்பிய) எதிலிகளுக்கும் போட்டி ஏற்படுகின்றது. இதனால் குறைந்த செலவில் உழைப்பாளர் கிடைப்பதுடன், நிறவெறியால் ஆசிய—ஆப்பிரிக்க ஏதலிகள் நசுக்கப்படவும் வெருட்டப்படவும் கூடும். இதன் எதிரொலியாக அம்மக்களின் தாயகங்களில் அரசியல் நிலையின்மையும் மற்ற இடர்ப்பாடுகளும் கண்டிப்பாகப் பெருகக் கூடும். இதனால் பயனடையப் போவது வலுத்த நாடுகள் தாம்!

இல்வாறாக அவரவர் அரிப்புகளுக்குத் தகுந்த படி புதிய உலகப் பார்வை ஏற்பட்டு வருகின்றது.

இதுவரை மேற்கு, கிழக்கு என்று இருந்த ஐரோப்பிய நாடுகளின் பாகுபாடு இனி நடு ஐரோப்பா என்ற வட்டத்திற்குள் இணைந்த செருமானியின் தலைமையின் கீழ் இங்கிலாந்து, ஆலந்து, டென்மார்க்கு, ஆத்திரியா, சுவிசு போன்ற நாடுகள் (ANGLO—SAXON) இணைந்து புதியதொரு வளையம் உருவாகப்போகிறது. பொருளியல் வலிவுடன், கடல் வலிவும் அமெரிக்கத் தொடர்பும் கொண்டதாக அஃது அமையுமானால் வருங்கால வல்லரசாக அந்த வளையம் உருவாவது தவிர்க்க முடியாததாகி விடக் கூடும்.

பின்னர் உலகக் கடன் என்னும் பேராலும் பிறவகை உதவிகளைக் காட்டியும் பொருளற்ற நாடுகள் புதுவகைக் குடியமைப்புகளாக மாறி மேன்மேலும் நசிந்தும் நலிந்தும் போகலாம். ''வருமுன்னர் காவாதான் வாழ்க்கை எரிமுன்னர் வைத்தூறு போலக் கெடும்'' என்று திருவள்ளுவர் குறிப்பிட்ட வண்ணம் ஆகிவிடலாம்.

உருமாறிய உலகின் தரம் குறையும் என்பதறிந்து சில்லறை அரசியல் பேசாமல் செந்தமிழ் இன மக்கள் தங்களுக்கென்றொரு நாடு கண்டால், புது உலகில் புது நடை போடமுடியும்.

---

## உ.த.மு.க. உறுதி பெற வேண்டும்!

தமிழினம் தனக்குள் முரண்பட்டு, மோதலிட்டுக் காட்டிக் கொடுத்து அழிவடையும் என்று கருதவில்லை அது தனக்குள் ஒற்றுமையும் அமைதியும் பேணி, ஒருங்கிணைத்துக் கொண்டு,பகையுணர்ச்சிகளுக்கு இடம் கொடாமல் முன்னேறும் என நம்புகிறேன்.

தனிநலம்,தன்னலத் தலைமை, கட்சிநலம் கருதி மக்களுக்குக் கெதிரான நடவடிக்கையில் ஈடுபடுகின்ற போக்கை உ.த.மு.க. உறுதியாக நின்றெதிர்க்கும் வலிமை பெறல்.வேண்டும்.

— *பறம்பை அறிவன்*.

# தமிழின உணர்வற்ற தமிழர் தாளிகைகளும் பார்ப்பரின உணர்வுள்ள பார்ப்பன இதழ்களும்!

--அதியமான்-

**தமிழிதழ்களின் நிலை :**

தமிழர்களால் நடத்தப்படுகின்ற நாள் இதழ்கள் கிழமை, திங்கள் இதழ்கள் பல இருக்கின்றன. *தினத்தந்தி, மாலை முரசு, மாலை மலர், தினகரன், இராணி, தேவி* இன்னும் பல. இவற்றின் மீது தமிழின உணர்வுள்ள தமிழ் அறிஞர்கள் பெரும் மதிப்பு வைத்திருக்கின்றனர். அவற்றை வாங்கிப் படிப்பதில் ஆர்வமும் காட்டுவதை நாம் காண இயலும்.

இவற்றில் தமிழ்மொழி, தமிழினம், தமிழ்நாடு ஆகியவற்றின் முன்னேற்றத்திற்கு உழைக்கும் தலைவர்களைப் பற்றியோ அவர்களுடைய கருத்துகளைப் பற்றியோ செய்திகள் வருவதில்லை. தன் இன நலச் செய்திகளை இவ்விதழ்கள் சரியாக எழுதுவதில்லை. சிலநேரங்களில் செய்திகளை வெளிப்படுத்துவதும் கிடையாது. தமிழ்நாட்டில் தமிழ் இலக்கிய அமைப்புகள் மிகுதியாக உள்ளன. அங்கெல்லாம் நடைபெறும் நிகழ்ச்சிகள் இத்தமிழ்த் தாளிகையில் வருவது கிடையாது. அப்படியே வந்தாலும் நுணுக்கி, வேண்டா வெறுப்பாகச் சில வரிகளில் செய்தியை நன்கு அறிந்துகொள்ள இயலாதபடிக்கு வெளியிடுவதை நாம் காண்கிறோம். இச்செய்திகளைத் தமிழர் நடத்தும் இதழ்கள் வெளிப்படுத்தும் என்ற நம்பிக்கையில் இதழ் ஆசிரியர்களை அணுகிக் கூறினாலும் அவற்றின் மீது அவ்வளவாக அவர்கள் அக்கறைக் காட்டுவதில்லை.

ஏரலில் திருவள்ளுவருக்குச் சிலை எடுத்துப் பெருவிழா ஒன்று மிகச் சிறப்பாக நடந்தது. தமிழறிஞர் பலர் கலந்து கொண்டு சிறப்புரையை நல்ல ஆய்வுரைகளாக ஆற்றினர். ஆண்டுதோறும் அங்கு திருவள்ளுவர் ஆண்டுவிழா நடக்கிறது. அங்குப் **பெருஞ்சித்திரனார், அறவாணன்** இன்னும் தமிழ் அறிஞர்கள் பலர் கலந்து சிறப்பிக்கின்றனர். சிறந்த கருத்துகளைப் பற்றிப் பேசுகின்றனர். புலவர் திரு. **சிவசங்கு** அவர்கள் நடத்தும் அவ்விழாச் செய்திகள் தமிழர் நடத்தும் தாளிகைகைகளில் வருவதே கிடையாது. அதுபோன்று இன்னும் எத்தனையோ நிகழ்ச்சிகள் நடக்கின்றன. சில வரும்; வந்தாலும் ஒருசில வரிகளுக்கு மேல் அச்செய்திகள் வரா. அவ்விழாக்களில் பேசும் கருத்துகள் மிகச்சிறந்தவை. அவற்றை மக்கள் அறிந்து கொள்ள வேண்டி வெளியிட்டால் மிகச் சிறப்பாக இருப்பதோடு, தமிழ் நூல்களில் கூறப்பட்டுள்ள அறச்செய்திகளை அறிந்து கொள்ள அவை உதவும். ஆனால் அவை தமிழர் இதழ்களில் இடம் பெறுவது கிடையாது.

22—7—90இல் நெல்லைச் சந்திப்பில் தினத்தந்தி, மாலைமுரசு ஆகிய இதழ்களின் அலுவலகத்தின் அருகில் அமைந்துள்ள அறிஞர் அண்ணா திருமண மண்டபத்தில் தமிழ்நாடு இளைஞர், மாணவர் பேரவை ஒரு மாநாட்டை நடத்தினர். மிகச் சிறந்த அறிஞர்கள் அந்நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டு சிறப்புரையை ஆய்வுரையாக ஆற்றினர். தமிழர்கள் நடத்தும் இதழ்களில் எதிலும் அச்செய்திகள் வரவில்லை. இந்தியன் எக்சுபிரசு (Indian Express) என்ற ஆங்கில இதழில் மட்டும் இது செய்தியாக வெளிவந்தது. அம்மாநாட்டில் இயற்றிய "தமிழ்வழி படித்தவர்களுக்கே அரசு வேலைகள் கொடுக்கப்பட வேண்டும்" என்ற அடிப்படையில் போடப்பட்டத் தீர்மானங்கள் எந்தத் தமிழ் இதழ்களிலும் வரவில்லை. இதை அவ்வளவு முகாமையான செய்தியாகக் கருதவில்லை போலும். பலமுறை தினத்தந்தி, மாலைமுரசு செய்தி அலுவலகத்தில் எழுதிக் கொடுத்தும் வெளியிட மனமற்றவர்களாக இருந்து விட்டார்கள்.

ஒரு காலத்தில் தினத்தந்தி நிறுவனர் ஆதித்தனார் அவர்களைத் தினமலர் இழிவுபடுத்தி எழுதியபோது தினமலரை மன்னிப்புக் கேட்க வைக்க முடியாமைக்குக் கரணியம் என்ன? தமிழர்களுடைய அன்பைத் தினத்தந்தி பெறவில்லை என்பதை உணர வேண்டும்.

தமிழ்மொழி, இன, நாட்டு முன்னேற்றத்திற்காக உழைக்கும் தமிழினக் குழுக்கள் நடத்தும் மாநாடு, கூட்டங்கள் மற்றும் பலவகைப் பணிகளைத் தமிழ் இதழ்கள் வெளியிடா விட்டால் வேறு யார் வெளியிடுவது? எனவே இனிமேலாகிலும் தமிழ்த் தொடர்பான நிகழ்ச்சிகளையும், கருத்துகளையும் தமிழர் இதழ்கள் வெளியிட முன்வர வேண்டும். இல்லையெனில் தமிழர்களுக்கும் தமிழர் இதழ்களுக்கும் ஒட்டிய அன்புத் தொடர்பு அற்றுப்போகும்.

***பார்ப்பனர் இதழ்களின் நிலை:*** பார்ப்பனர்கள் நடத்தும் இதழ்கள் பல உள்ளன. தினமலர், தினமணி, துக்ளக், இதயம் இன்னும் பல. இவற்றில் அவர்களுடைய இன நல உயர்விற்கும், தமிழர்கள் என்றும் அவர்களுக்கு அடிமைகளாகவே இருக்க வேண்டும் என்ற கருத்தை ஆழமாகக் கொண்டும் நாள் தவறாமல் பெரிய,பெரிய கட்டுரைகள் செய்திகள் வெளியாவதை நாம் பார்க்கிறோம். இந்த இதழ்களில் எழுதுவோர் சிலர் தமிழர்கள். பணியாற்றுபவர் சிலரும் தமிழர்களே. அங்ஙனமிருந்தும் தமிழ்மொழி தமிழினத்தை இழிவுபடுத்தும் செய்தி-

கள் அவற்றின்வழி வெளிவருகின்றன. பார்ப்பனர்கள் நடத்தும் சிறுநிகழ்ச்சியைக்கூடப் பெரிது படுத்தி தன் இனத்தை உயர்த்திக்காட்டி வெளியிடுகின்றனர். தன இனத்தை மேற்குடிமக்களாக வாழ வகை செய்து கொண்டிருப்பதைத் தமிழர்கள் கண்டும் காணாத குருடர்களாக வாழ்கின்றனர். அப்பார்ப்பனர்கள் தங்களுடைய இதழ்களில் தமிழினத்தையும் தமிழ்மொழியையும் இழிவுபடுத்தியும், தாழ்த்தியும் எழுதுகின்றனர். தமிழர் நடத்தும் நிகழ்ச்சிகளைத் தமவிருப்பப்படி மாற்றியும், மறைத்தும் எழுதுகின்றனர். தமிழகத்தில் நடக்கும் தமிழின மீட்புப் போராட்டத்தை எவ்வளவு இழிவுபடுத்த முடியுமோ, அவ்வளவு இழிந்த சொற்களைப் பயன்படுத்தி எழுதித் தமிழர்களைப் பகடி செய்தும் அவ்விதழ்கள் வாழ்ந்து கொண்டிருக்கின்றன. அவர்கள் தமிழர்களை இழித்து எழுதும் துணிவு போல் நம் தமிழர் நடத்தும் இதழ்களுக்கு அவர்களின் கருத்தை எதிர்த்து எழுதும் துணிவு வரவில்லையே!

காஞ்சிமடத் தலைவன் வாய் திறந்தால் அது தூய செய்தியாகவும், அது, மாந்த வாழ்வியலுக்கு வளமை சேர்ப்பதாகவும் வெளியிடுகின்றனர். பார்ப்பனர் அடிமைகளின் பேச்சுகளை ஒன்றுவிடாமல் பார்ப்பனர் இதழ்கள் வெளியிடுவதைப் பார்க்கிறோம். 'இந்து முன்னணி', 'ஆர். எசு. எசு', 'இந்து பரிசத்' ஆகிய பார்ப்பன முன்னேற்ற அமைப்புகள் நடத்தும் நிகழ்ச்சிகளை ஒன்றுவிடாமல் அவர்களுடைய இதழ்கள் பெருமையோடு வெளியிடுவதையும் நாம் காண்கிறோம்.

தென்காசி கோவில் கோபுரத்தைக் கட்டியவன் தமிழன். அந்தக் குடமுழுக்கு விழாவில் கத்தப்பட்ட மொழி சமற்கிருதம். தமிழன் கட்டிய கோவில்களில் பார்ப்பனரின் செத்த மொழி ஆளுமை செய்கிறதே என்று எவனாவது என்றைக்காவது எண்ணிப் பார்த்தது உண்டா? பலநூற்றாண்டுகள் அம்மொழி அங்கு ஒலிக்கப்படுவதின் பொருள் இந்நாள் வரை யாருக்கும் தெரியுமா? இதனை எண்ணிப்பார்த்து அதற்கு எதிர்ப்புக் கொடுக்கும் தமிழர் தலைவர்களுக்குத் தமிழர் இதழ்கள் துணை நிற்பதில்லையே!

பார்ப்பனர் இதழ்கள் அவர்களுடைய இனம் வாழ இப்படிப்பட்ட செய்திகளை மிகைப்படுத்திப் படங்களுடன் வெளியிட்டுப் பரப்பியது. கோபுரம் கட்டியவருக்குப் பல பட்டங்களைக் கொடுத்து இன்னும் இத்தகைய கோவில்களைக் காட்டிப் பார்ப்பனர்களைப் பிழைக்க வைக்கவே அப்புகழ் மாலைகளைச் சூட்டுகின்றன. இத்தகையான உணர்வு தமிழர் நடத்தும் இதழ்களுக்கு வர வேண்டும். தமிழர்களே! தமிழ்ச் செய்திகளை இருட்டடிப்புச் செய்யாதீர்கள். பொதுவாக இச்செயல்கள் தமிழர்களைத் தாழ்த்தும்; அடிமையாக்கும். பார்ப்பன ஏடுகள் பார்ப்பனரை உயர்த்துவது போலத் தமிழர்களைத் தமிழர் தாளிகைகள் உயர்த்திக் காட்ட வேண்டும். பார்ப்பனரைவிடத் தமிழர்கள் எவ்வகையிலும் குறைந்தவர்களல்லர். ஆனால் தமிழர்களே தமிழர்களுக்குத் துணையாக இல்லையே! என் செய்வது? O

## உன்வயிற்றுப் பிள்ளைகளா

பாவலர். இளஞ்சித்திரன்

உன்வயிற்றுப் பிள்ளைகளா இவர்கள்?—
தாயே-தமிழ்த்தாயே! [உன்]

இன்றிங்குத் தமிழரென
இருப்பாரில் பலரை நான்
பார்க்கின்றேன்; ஏமாறி தானம்மா கேட்கின்
றேன்! (உன்)

அன்பிலேயே இவர் செயல்களில், வீரம்
அணுவளவுமில்லை; போயினர் சாரம்!
நன்றிவர் இருந்த இருப்பை மறந்தார்!
நாயென வேளவர் பின்னாலும் திரிந்தார்!
(உன்)

அன்னை, உன் பிள்ளைகள் அங்கே மடிகிறார்!
அயலவன் சிங்களனால்வெட்டுப் படுகிறார்!
தன்னினச் [சாவுகண் டிவரெழ வில்லையே!
தடுத்ததை நிறுத்திடத் துடிக்கவும்
இல்லையே! (உன்)

ஆனதன் னுரிமை நிலத்திலவர் அழுகிறார்;
அல்லல்கள் ஆற்றுதுபோர்க்குரல் தருகிறார்!
மானமிங் கிருப்பவ ரிடமம்மா இல்லையே!
மழுங்கிய உணர்ச்சியும் மரத்ததாய்
உள்ளதே! (உன்)

வீடில்லை! வாழ்வில்லை என்றுபோர் செய்கிறார்?
விடுதலைக் கென்றவர் களத்தினில் நிற்கிறார்?
சூடிலர் போல்தமிழ் நாட்டினர் நடப்பதேன்?
துப்பின்றி அவரைப் பழித்துமே கிடப்ப
தேன்? (உன்)

நகையில்லை, நட்டில்லை என்றுபோர் செய்கிறார்?
நாடவர் நாட்டை மீட்கவே நிற்கிறார்!
வகையில்லை இவர்க்கெனின் அவர்க்குமா
இல்லை?
மனப்புழு வாஇவர்?எதுஇவர் எல்லை?(உன்)

வளமில்லை; நலமில்லை என்றுபோர் செய்கிறார்?
வண்டமிழ் மானம் மீட்கவே நிற்கிறார்!
உளமிலராய்த்தமிழ் நாட்டினர் இருப்பதேன்?
உயர்தமிழ் ஈழம் கிடைப்பதை வெறுப்ப
தேன்? (உன்)

Scanned with CamScanner

(3-ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஆகும். நாற்பது இலக்கம் உறுப்பினர்கள் உள்ள கட்சி எங்கள் கட்சி என்று பீற்றிக் கொள்ளும் தி. மு. க. பின்பற்றிகளுக்கும், ஏன் கலைஞர்க்குமே சொல்லிக் கொள்கிறோம்!

'கான முயலெய்த அம்பினில் யானை
பிழைத்தவேல் ஏந்தல் இனிது'

என்னும் திருவள்ளுவப் பெருமானின் திருவாய் மொழியை நன்கு படித்திருப்பீர்கள். ஆனால் உணர்ந்திருக்க மாட்டீர்கள்; உணர்ந்திருந்தாலும் அதை வாழ்க்கையிலும் கடைப்பிடித்து உணர்த்தியிருக்க மாட்டீர்கள்! ஆட்சிச் செருக்கும், அறிவு அகம்பாவமும் உள்ள உங்களிடம் படைச்செருக்கும், வினைத் தூய்மையும் இருத்தல் அரிதினும் அரிது.

திருவள்ளுவர் பெருமானின் கருத்தை ஊரெல்லாம் முழக்குவீர்கள். அவர் திருவுருவச் சிலையையும் நாட்டுவீர்கள்! ஆனால் அவர் என்ன சொன்னார், எதற்குச் சொன்னார், ஏன் சொன்னார், எப்படிச் சொன்னார், எவருக்காகச் சொன்னார், என்கின்ற மெய்ப்பொருளை நீங்கள் அறிந்திருப்பதாக இதுவரை நீங்கள் எங்கும் எப்பொழுதும் எதன் பொருட்டும் நீங்கள் காட்டவில்லை. உங்களிடம் உள்ள போலித்தனமான அறிவும், புரையோடிய உள்ளமும், புல்லிய செயல்களுமே உங்களை அவற்றினின்று வேறு பிரித்து வைத்திருக்கின்றன. உங்கள் முதுகில் நீங்களே தட்டிக் கொடுக்கவும் உங்களை நீங்களே மெச்சித்துக் கொள்ளவுந்தாம் நீங்கள் அறிவீர்கள். எனவே எந்த வாய்ப்பையும் நீங்கள் உங்களுக்காகத்தான் பயன்படுத்துவீர்களே தவிர, இம்மொழிக்காகவும், இனத்திற்காகவும், நாட்டிற்காகவும் பயன்படுத்தமாட்டீர்கள்.

இவ்வாறு நீங்கள் என்றுமே சிந்தித்துக் கூட பார்த்திருக்க மாட்டீர்கள். ஏனெனில் பிறர்க்கு உடலில் மட்டுந்தான் கொழுப்புப் படரும். ஆனால், கலைஞரே, உங்களுக்கு நீங்கள் மூச்சுயிர்க்கும் நெஞ்சாங்குலையிலும் கொழுப்பு! நீங்கள் பார்க்கின்ற கண்களிலும் கொழுப்பு! நீங்கள் சிந்திக்கின்ற மூளையிலும் கொழுப்பு படர்ந்திருக்கிறது என்பதை அறிந்து கொள்ளுங்கள். கிடைத்த வாய்ப்புகளையெல்லாம் பறிகொடுத்து விட்டீர்கள்! இனி உங்கட்கு வெறும் வாய்ப் பூ தான்! இது நிற்க.

எனவே, தமிழர்களே! இனி எந்த அரசியல் கட்சியையோ, அரசியல் தலைமையையோ நம்ப வேண்டா. இனிமேலாகிலும், இந்திய அரசியலிலிருந்து பிரிந்து தனித்தமிழ்நாடு பெறுவதே நம் குறிக்கோளாக, முழு முயற்சியாக, இருத்தல் வேண்டும்.

ஆகவே, வருகின்ற, வந்துபோகின்ற தேர்தல் திருவிழாக்களைப் பற்றிக் கவலைப்பட வேண்டா. அதில் குதித்துக் கொம்மாளமிட்டுக் குளிர்காய விரும்பும் எவரையும் நீங்கள் நம்பவும் வேண்டா. அப்படி ஒருவேளை நீங்களும் தேர்தலில் ஈடுபட்டு, எவரையேனும் உங்கள் மனத்துக்கும் அறிவுக்கும் பிடித்தவர் ஒருவர்க்கு நீங்கள் ஒப்போலையிட விரும்பினால், அவர் தனித்தமிழ்நாட்டுக் கொள்கையுடையவராக இருக்கட்டும்.

ஆமாம்! இந்தியக் கொடுங்கோல் சாதிமதம் வெறிகொண்ட, பார்ப்பனீய முதலாளிய வடநாட்டு அரசினின்று தமிழகத்தை மீட்டுத் தனி இறையாண்மை அரசமைப்பவரையே அவ்வாறு உறுதி கொடுப்பவரையே தேர்தலில் வெற்றி பெறச்செய்யுங்கள்!

---

**உ.த.மு.க.வின் உயர்ந்த கொள்கைகள்!**

1) தூய்மையான தமிழ்மொழி முன்னேற்றம்!
2) சாதியற்ற, மத வேறுபாடற்ற சமநிலைக் குமுகாயம்!
3) இழிவுகளும், பூசல்களும், ஏமாற்றும் இல்லாத அரசியல்!
4) தமிழ்த் தேசிய இனத்திற்குப் பொருந்திய பொதுவுடைமைப் பொருளியல்!
5) மனம், அறிவு, வாழ்க்கை இவற்றை வளப்படுத்தவும், நலப்படுத்தவுமான அருவருப்பற்ற கலை வளர்ச்சி!
6) பழந்தமிழ் மரபுக்கும், மாந்தவியல் சிறப்புக்கும் ஒத்த பண்பாட்டுப் பரிமாற்றம்!
7) எல்லாவற்றிலும் காலத்திற்கேற்ற அறிவியல் அணுகுமுறை'

**சிந்தனைக்கு-61**

ஒரு நாடு ஒன்றுபட்டும் ஒற்றுமையுடனும் இருக்கவேண்டுமானால், அவற்றுக்குரிய அடிப்படைக் கூறுகள் இயற்கையாகவே அமைந்திருத்தல்வேண்டும்; செயற்கையாக அவற்றை உருவாக்க இயலாது.

(மாதம் இருமுறை வெளிவரும்) இதழ் எண். 144

அனுப்புதல்:

தமிழ்நிலம்

5. அருணாசலந் தெரு
திருவல்லிக்கேணி, சென்னை-5

தொலைபேசி எண்: 847329

உறுப்பினா:

| | |
|---|---|
| தனி இதழ் விலை | உரு. 1-00 |
| ஆண்டுக் கட்டணம் | உரு. 50-00 |
| அரையாண்டுக் கட்டணம் | உரு. 25-00 |

• தமிழர் இல்லந்தோறும் கட்டாயம் படிக்க வேண்டிய இதழ்கள்! தமிழ்நிலம், தென்மொழி, தமிழ்ச்சிட்டு

ஆசிரியரும், வெளியிடுபவரும்:
பாவலரேறு பெருஞ்சித்திரனார்,
அச்சிடுவோர்: தென்மொழி அச்சகம்,
5, அருணாசலத் தெரு, சென்னை-5.

Scanned with CamScanner